**<u>அரசுத் தேர்வுத் துறை, சென்னை – 600 006.</u>**

**<u>இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வு, மே 2022</u>**

**<u>செய்முறைத் தேர்வு</u>**

தமிழக அரசு, 2011–12 ஆம் கல்வி ஆண்டு முதல் புதிய பொதுப் பாடத்திட்டத்தினை (சமச்சீர்கல்வி) அறிமுகப்படுத்தி உள்ளதால், மார்ச் 2012 முதல் அறிவியல் பாடத்தில் செய்முறைத் தேர்வு கட்டயமாக்கப்பட்டுள்ளது. அதன்படி, அறிவியல் பாடத்தில் கருத்தியல் தேர்விற்கு 75 மதிப்பெண்களும் செய்முறைத் தேர்விற்கு 25 மதிப்பெண்களும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**<u>இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வில் அறிவியல் பாடத்தில் செய்முறைத் தேர்வு கீழ்க்கண்டவாறு அமையும் :</u>**

| பாட குறியீடு எண் | செய்முறைப் பாடம் | காலம் |
|---|---|---|
| 11 | இயல் அறிவியல் (Physical Science)<br>இயற்பியல் மற்றும் வேதியியல் | 1 மணி நேரம் |
| | உயிர் அறிவியல் (Biological science)<br>தாவரவியல் மற்றும் விலங்கியல் | 1 மணி நேரம் |

அறிவியல் பாடத்தில் செய்முறைத் தேர்விற்கு 2 மணி நேரம்

செய்முறைத் தேர்வு காலை 9.00 மணி முதல் மதியம் 11.00 மணி வரையும், பகல் 2.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை இரு வேளையில் நடத்தப்பட வேண்டும்.

<u>செய்முறைத் தேர்வு வினாக்கள் மற்றும் மதிப்பெண்கள்</u>

செய்முறைக்கென பாடப்புத்தகத்தில் வழங்கப்பட்டுள்ள கையேட்டிலுள்ள வினாக்களிலிருந்து கீழ்வருமாறு மதிப்பெண்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

**இயல் அறிவியலில்:**

இயற்பியல் – ஒரு வினா – 5 மதிப்பெண்
வேதியியல் – ஒரு வினா – 5 மதிப்பெண்
– 2 வினா = மொத்தம் 10 மதிப்பெண்கள்

**உயிர் அறிவியலில்:**

தாவரவியல் – ஒரு வினா – 5 மதிப்பெண்
விலங்கியல் – ஒரு வினா – 5 மதிப்பெண்
–2 வினா = மொத்தம் 10 மதிப்பெண்கள்

2...

எனவே மொத்தம் 20 மதிப்பெண்களுக்கு விடையளிக்க வேண்டும் . விடையளிக்க வேண்டிய வினாக்களை மாணவர்களாகவே, செய்முறை ஆய்வு கையேட்டில் உள்ள தொகுப்பிலிருந்து மந்தண முறையில், குலுக்கல் (Lot System) முறையில் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். கணக்கீடு வினாக்களுக்கு ஒரு கணக்கீடு (Single Reading) எடுத்தால் போதுமானது.

<u>அகமதிப்பீடு:</u>

| | | |
|---|---|---|
| மாணவர்கள் ஆய்வுக்கூட வருகை | – | 1 மதிப்பெண் |
| மாணவர் ஆய்வக செயல்திறன் | – | 1 மதிப்பெண் |
| மாணவர் ஆய்வக ஈடுபாடு | – | 1 மதிப்பெண் |
| ஆய்வக பதிவுக் குறிப்பேடு | – | 2 மதிப்பெண்கள் |
| மொத்தம் | – | 5 மதிப்பெண்கள் |

பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் அறிவியல் பாடத்தில் தேர்ச்சிக்கான குறைந்த பட்ச மதிப்பெண்கள் – கருத்தியல் 75 மதிப்பெண்களில் 20 மதிப்பெண்களும் மற்றும் செய்முறை தேர்வில் 25 மதிப்பெண்களில் 15 மதிப்பெண்களும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. மாற்றுத் திறனாளி மாணவர்கள் விருப்பப்படின், செய்முறைத் தேர்வு எழுதுவதிலிருந்து விலக்கு கோரி சம்பந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியரிடம் கடிதம் சமர்ப்பித்து விலக்கு பெற்றுக் கொள்ளலாம். விலக்கு கோரும் தேர்வர்களின் கோரிக்கைக் கடிதங்களை பெற்று சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலரிடம் ஒப்படைக்க செய்முறைத் தேர்வு பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

<u>செய்முறைத் தேர்வுகள் நடத்துவது குறித்து தலைமைக் கண்காணிப்பாளர்கள், துறை அலுவலர்கள் மற்றும் புறத் தேர்வாளர்கள் ஆகியோர்களுக்கு அறிவுரைகள்:</u>

<u>செய்முறைத் தேர்வு நடத்தப்படும் முறை:</u>

ஒவ்வொரு தேர்வரும் இயல் அறிவியல்/ உயிர் அறிவியலுக்கான செய்முறைத் தேர்வு எழுத வேண்டும். குலுக்கல் முறையில் அவர்களுக்கான செய்முறைத் தேர்விற்கான வினாவைக் குலுக்கல் முறையில் பெற்று **(பாடத்திட்டத்திற்கு 1 மணி நேரம் + 1 மணி நேரம் = 2 மணி நேரம்)** செய்முறைத் தேர்வினை எழுதி முடிக்க வேண்டும். இந்த முறையிலான தேர்வு ஒவ்வொரு குழுவிலும் 20 தேர்வர்கள் அனுமதிக்கப்பட்டு முதல் குழு இயல் அறிவியல் செய்முறை தேர்வு எழுதும் போது அதே சமயத்தில் மற்றொரு குழு உயிர் அறிவியல் செய்முறைத் தேர்வு எழுதுவர். பின்னர் முதல் குழு உயிர் அறிவியல் தேர்வு எழுதும் போது, அதே சமயத்தில் மற்றொரு குழு இயல் அறிவியல் செய்முறைத் தேர்வு எழுதுவர். காலை/மாலை நடத்தப்படும் செய்முறைத் தேர்வு **<u>25.04.2022–ல் தொடங்கி 02.05.2022–க்குள்</u>** முடிக்கப்பட வேண்டும்.

**தலைமைக் கண்காணிப்பாளர்:**

செய்முறைத் தேர்வு நடத்தப்படும் பள்ளியின் தலைமை ஆசிரியர்/முதல்வர் அந்த செய்முறைத் தேர்வு மையத்தின் தலைமைக் கண்காணிப்பாளராக செயல்படுவார். தலைமைக் கண்காணிப்பாளர் செய்முறைத் தேர்வுகளை நடத்துவதற்கான அனைத்து முன்னேற்பாடுகளை செய்வதுடன், செய்முறைத் தேர்வினை செம்மையாகவும் எவ்வித புகார்கள் இன்றியும் நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். செய்முறைத் தேர்விற்குத் தேவையான சோதனைக்கூட பொருட்களையும் வாங்கி வைத்திடல் வேண்டும்.

தேர்வர்கள் அனைவரும் அவர்கள் செய்முறை செய்வதற்கான குழு தேதி வேளை மற்றும் பாடம் ஆகிய விவரங்களை தேர்வு தொடங்குவதற்கு முன்னரே அறிவித்திட வேண்டும். இப்பணியில் தலைமைக் கண்காணிப்பாளர்களே தனிக்கவனம் செலுத்தி செய்முறைத் தேர்விற்கான கால அட்டவணையினை அனைத்து தேர்வர்களுக்கும் அறிவித்து எவ்வித புகார்களும் எழாமல் தேர்வினை நடத்திட வேண்டும்.

**புறத் தேர்வாளர்:**

புறத் தேர்வாளர் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலரால் நியமனம் செய்யப்படுவார். பாண்டிச்சேரியை பொறுத்தவரை புறத்தேர்வாளர், பாண்டிச்சேரி, முதன்மைக் கல்வி அலுவலரால் நியமனம் செய்யப்படுவார்கள். புறத்தேர்வாளர்கள் அவரவருக்குரிய தேர்வு மையத்திற்கு ஒரு மணி நேரம் முன்னதாகவே சென்றடைய வேண்டும். செய்முறைத் தேர்வின் பொருட்டு, இணைப்புப் பள்ளிகளின் பெயர்ப்பட்டியலின் ஒரு நகலை அப்பள்ளியிலிருந்து பெற்றிட வேண்டும்.

**மதிப்பெண் பட்டியல் தயாரித்தல் சார்ந்த முக்கிய அறிவுரைகள்:**

புறத்தேர்வாளர் ஒவ்வொரு தேர்வரின் செய்முறை விடைத்தாளினை மதிப்பீடு செய்து அன்னாருக்கு செய்முறைத் தேர்வில் வழங்கப்பட்டுள்ள மதிப்பெண்ணை விடைத்தாளின் முகப்பு பக்கத்தில் எழுதிட வேண்டும்.

அறிவியல் பாட செய்முறைத் தேர்வில் பெற்ற புறமதிப்பீடு மற்றும் அகமதிப்பீடு மதிப்பெண்களை பதிந்து கூட்டுத் தொகை பதிய வேண்டும்.

பதிவெண்களுடன் கூடிய மதிப்பெண்கள் தாட்களை Download செய்து பயன்படுத்தும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால் Online மூலம் Download செய்யப்பட்ட மதிப்பெண் தாட்களில் மதிப்பெண்கள் பதியப்பட வேண்டும்.

செய்முறைத் தேர்வு ஆரம்பிக்கும் நாள் முன்னரே, பெயர்பட்டியல் பெறப்பட்டவுடன், மதிப்பெண் பட்டியலில் அக மதிப்பெண்களை சம்பந்தப்பட்ட பாட ஆசிரியரால் பூர்த்தி செய்யப்பட்டு, மதிப்பெண் பட்டியலை தேர்வு மைய தலைமைக் கண்காணிப்பாளர் பெற்றிட வேண்டும். இதனை சரிபார்த்து, தலைமைக் கண்காணிப்பாளரும் தனது கையொப்பத்தை இட வேண்டும். பின்னர் புறத்தேர்விற்கு ஒதுக்கப்பட்டுள்ள மதிப்பெண்களுக்கு மாணவர்கள் பெறும் மதிப்பெண்களை மதிப்பெண் தாளில் புறத்தேர்வாளர்களால் மந்தண முறையில் பதிவு செய்யப்பட்டு, அந்தந்த மாணவருக்கான மொத்த மதிப்பெண்கள் பதியப்பட்டு பின்னர் மதிப்பெண் தாட்கள் உறையிலிட்டு அரக்கு முத்திரையிட்டு அந்தந்த மைய தலைமைக் கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். செய்முறைத் தேர்வு விடைத்தாட்களையும் கட்டி, அரக்கு முத்திரையிட்டு தலைமைக் கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

**ஒம்/–**
**அரசுத் தேர்வுகள் இயக்குநர்,**
**சென்னை –600 006.**

<u>நகல்:</u>

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
3. இணை இயக்குநர் (கல்வி) பாண்டிச்சேரி
4. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்

} தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பி வைக்கப்படுகிறது.